**சிவில் சமூக அறிக்கை**

பெப்ரவரி 4, 2018 ஆனது இலங்கை சுதந்திரம் அடைந்து 70 வருடங்கள் ஆனதைக் குறிக்கிறது. இவ் வருடமும் சுதந்திர தினமானது இதற்கு முந்தைய வருடங்களைப் போலவே வெகு விமரிசையாக அரசினாலும், சமூகத்தின் சில பிரிவினராலும் கொண்டாடப்படும். எனினும், வியக்கத்தக்க சமூக நலச் சுட்டிகளுடன் கூடிய, முறைமையான தொழிற்படும் சனநாயக நாடாக இலங்கை விளங்குகின்ற போதிலும், எமது சுதந்திரத்துக்குப் பிந்தைய வரலாறானது, நீதி மற்றும் சமத்துவத்துக்கான போராட்டங்களும், அரசுக்கெதிரான ஆயுதக் கிளர்ச்சிகளும் நிறைந்ததாகவே காணப்படுகிறது. இப் போராட்டங்கள் கொடூரமான அரச ஒடுக்குமுறை, குடிமக்கள் (சிவில்) சுதந்திரத்தின் மீதான கட்டுப்பாடுகள், மற்றும் மனித உரிமை மீறல்கள் என்பவற்றை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. பல்லாயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டனர். பலரது மரணம் கணக்கில் வராது போனது. பலர் இடம் பெயர வேண்டியிருந்தது. மேலும் பலர் காணாமற் போயினர் அல்லது காணாமல் ஆக்கப்பட்டனர். தனிப்பட்ட மற்றும் கூட்டு உரிமைகளை அரசு அங்கீகரித்து, நிலைநிறுத்தத் தவறியமையானது, குறைபட்ட சனநாயக ஆட்சியும், பிளவுபட்ட சமுதாயம் ஒன்றும் தோன்றுவதற்கு வழிகோலியது. எனவே சுதந்திர தினக் கொண்டாட்டங்கள் நீதியான, நியாயமான, அமைதியான, மற்றும் வேறுபாடுகளை உள்ளடக்கிய சமுதாயம் ஒன்றுக்கான நமது அபிலாஷைகளை வெளிப்படுத்துவதாகவும், காலனித்துவத்தின் பின்னரான தோல்விகளைப் பிரதிபலிப்பதற்கான ஓர் உண்மையான முயற்சியாகவும் அமையவேண்டும் .

ஏழு தசாப்தங்களாக இலங்கை சுதந்திர நாடாக இருக்கின்ற போதிலும், இலங்கையில் பாதிக்கப்பட்டவர்களினதும், பாதிக்கப்பட்ட சமூகங்களினதும் துயரங்கள் பலவாகும். இராணுவமயமாக்கல், நில ஆக்கிரமிப்பு, காணாமல் ஆக்கப்பட்டோர், மற்றும் கைதிகளின் உரிமைகள் உட்பட பல பிரச்சினைகள் தொடர்பாக இன்று நாடு முழுவதும் இடம்பெறும் தொடர்சியான போராட்டங்கள் இதற்குச் சான்று பகரும். தொடர்ச்சியான வன்முறை, அச்சுறுத்தல்கள், கண்காணிப்பு, மற்றும் பயனற்ற சட்ட அமுலாக்கம் என்பவற்றைக் கொண்டமைந்த, மிகவும் பலப்படுத்தப்பட்ட, எங்கும் வியாபித்திருக்கும் இராணுவ ஆக்கிரமிப்பிலிருந்து எழும் சவால்களை இங்குள்ள சமூகங்கள் தினமும் எதிர்கொள்ள வேண்டியுள்ளது. அரசியல் கைதிகளை விடுவிப்பது தொடர்பிலான முன்னேற்றமானது

மெதுவானதாகவும், திருப்தியற்றதாகவும் உள்ளது. மனித உரிமைப் பாதுகாவலர்களும், பத்திரிகையாளர்களும் அச்சுறுத்தல்கள், மிரட்டல்கள், மற்றும் பிற கட்டுப்பாடுகளைத் தொடர்ச்சியாக எதிர்கொள்ள வேண்டியுள்ளது. அரசைச் சார்ந்தவர்கள் அல்லது அரசியல்வாதிகள் தாம் செய்யும் குற்றங்கள் தொடர்பில் பயமற்றவர்களாக இருக்கும் நிலையே இங்கு காணப்படுகிறது. உண்மை, நீதி, மற்றும் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரணம் என்பவை பல சந்தர்ப்பங்களில் கிட்டாது நழுவிச் செல்பவையாகவே உள்ளன. மதம், இனம், பாலியல் சார்பு, உடலூனம் அல்லது பால்நிலை என்பவை தொடர்பான பாரபட்சமான சட்டங்கள், நடைமுறைகள், மற்றும் வன்முறை என்பவை இங்கு பரவலாகக் காணப்படுகின்றன. மேலும், பயங்கரவாதத் தடைச் சட்டம் போன்ற சட்டங்களை பிரதியீடு செய்வதற்கான பிழையான முயற்சிக்களினூடு குடிசார் (சிவில்) உரிமைகளை மட்டுப்படுத்துவதற்கான முயற்சிகளையும் நாங்கள் தொடர்ந்து அவதானித்து வருகிறோம்.

2015 சனவரியில் நிகழ்ந்த மாற்றமானது, ஒரு புதிய அரசியல் கலாச்சாரத்துக்கான இலட்சிய வாக்குறுதியுடன், சனநாயகத்தின் வெற்றியாக, அதாவது இது தொடர்பான குடிசார் (சிவில்) சமூகப் போராட்டங்களுக்கான தீர்வாக முன்னிறுத்தப்பட்டது. புதியதோர் அரசியலமைப்பு, நிலைமாற்று நீதிக்கான பொறிமுறைகள், மற்றும் ஊழலற்ற, நல்லாட்சிக்குத் தம்மை அர்ப்பணிக்கும் ஒரு அரசு என்பன வாக்குறுதிகளாக வழங்கப்பட்டன. இருந்தும் நாம் நிதி மோசடி, பலவீனமான மற்றும் அரசியல்மயமாக்கப்பட்ட நிறுவனங்கள் உட்பட பல சவால்களைத் தொடர்ந்தும் எதிர்நோக்குகிறோம். இவை பொறுப்புணர்வு மற்றும் வெளிப்படைத்தன்மை என்பவற்றுக்கு இடையூறாக இருப்பதுடன், சகவாழ்வு மற்றும் நல்லிணக்கம் என்பவற்றுக்குச் சவாலாகவும் அமைகின்றன. அரசியலமைப்புக்கான பத்தொன்பதாவது திருத்தம் மற்றும் தகவல் உரிமைச் சட்டம் போன்ற சட்டவாக்கம் மற்றும் அரசியலமைப்பு தொடர்பான சீர்திருத்தங்கள் மற்றும் சில நம்பிக்கையை ஏற்படுத்தும் நடவடிக்கைகள் வரவேற்கப்பட வேண்டும் என்றபோதிலும், சுதந்திரத்தை எல்லாக் குடிமக்களும் உண்மையாக அனுபவிப்பதற்கு மேலும் பல சீர்திருத்தங்கள் அவசியமாகும்.

இதனை இலங்கை எட்டிய ஓர் முக்கிய மைல்கல்லாக நாம் கண்டுகொள்கின்ற அதேவேளை, தேசிய வினாவுக்கான ஓர் அரசியல் தீர்வு, மனித உரிமைகள் மற்றும் குடிமக்கள் (சிவில்) சுதந்திரம்

என்பவற்றுக்கான மரியாதை, அனைத்து எண்ணிக்கையிலுமான சிறுபான்மையினருக்குமான பாதுகாப்பு, சட்டவாட்சியை நிலைநிறுத்துதல், தண்டனைக்குப் பயமற்ற கலாச்சாரம் மற்றும் பாகுபாடு என்பவற்றை முடிவுக்குக் கொண்டுவருதல், மற்றும் உண்மையான அமைதி, நல்லிணக்கம் மற்றும் நிலையான அபிவிருத்தி என்பவற்றை ஏற்படுத்துதல் என்பவை தொடர்பான எமது கோரிக்கைகளை நாம் இச் சந்தர்ப்பத்தில் வலியுறுத்த விளைகிறோம்.